SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் II பரீட்சை – ஜனவரி 2026
# (Level II Examination – January 2026)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள் (ISD)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவெ ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
# பிரிவு II பரீட்சை – ஜனவரி 2026
# (202) டிஜிட்டல் சூழலில் தகவல் முறைமைகள்
# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பதினைந்து (15) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பகுதி – A**

## *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.1** | (2) | **1.6** | (2) | **1.11** | சரியானது |
| **1.2** | (4) | **1.7** | (1) | **1.12** | தவறானது |
| **1.3** | (2) | **1.8** | (4) | **1.13** | சரியானது |
| **1.4** | (2) | **1.9** | (2) | **1.14** | தவறானது |
| **1.5** | (3) | **1.10** | (2) | **1.15** | தவறானது |

aat SRI LANKA

***வினா 1.1 – 1.10 - (ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், 20 புள்ளிகள்)***
***வினா 1.11 – 1.15 - (ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளிகள் வீதம், 05 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***பகுதி A முடிவு***

ஐந்து (05) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி – B**

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 1: தகவல் முறைமைகளின் எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் முறைமைகளின் தாக்கம்***

**(a)**
தரவு என்பது தினசரி நடவடிக்கைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மூல வடிவிலான, பதப்படுத்தப்படாத உண்மைகள் அல்லது புள்ளிவிபரங்களைக் குறிப்பதுடன், அவை அர்த்தத்தை வெளிப்படுத்துவதில்லை. மருத்துவமனையின் சுகாதார தகவல் முறைமையில் (HIS)> தரவுகளின் உதாரணங்களில் நோயாளியின் இரத்த அழுத்த அளவீடு 140/90 அஅர்ப அல்லது 120 mg/dL குளுக்கோஸ் அளவு போன்ற ஆய்வக சோதனை முடிவு ஆகியவை உள்ளடங்கும். இந்த மதிப்புகள் முறைமையில் பதிவு செய்யப்படுகின்றன, ஆனால் அவை வியாக்கியானம் செய்யப்படும் வரை வரையறுக்கப்பட்ட அர்த்தத்தைக் கொண்டுள்ளன.

மறுபுறம், தகவல் என்பது அர்த்தத்தை வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளலுக்கு ஆதரவளிக்கவும் செயன்முறைப்படுத்தப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது வியாக்கியானம் செய்யப்பட்ட தரவு ஆகும். மருத்துவமனைக்கு, தகவலின் உதாரணங்கள் 30% நோயாளிகளுக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதைக் காட்டும் தளப்பலகை அல்லது கடந்த மாதத்தில் நோயாளிகளின் அனுமதிகள் மற்றும் ஆய்வக முடிவுகளின் போக்குகளைக் குறிக்கும் சுருக்க அறிக்கை போன்றவற்றை உள்ளடக்கும். இந்த செயன்முறைப்படுத்தப்பட்ட தரவு மருத்துவமனை முகாமை மற்றும் மருத்துவர்களுக்கு நோயாளி பராமரிப்பு, வள ஒதுக்கீடு மற்றும் தொழிற்பாட்டு திட்டமிடல் குறித்து தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ள எடுக்க உதவும்.

சுருக்கமாகக் குறினால், தரவு என்பது மூல உள்ளீடு ஆகக் காணப்பட, அதே சமயம் தகவல் என்பது மருத்துவமனையின் HIS-க்குள் தீர்மானம் மேற்கொள்ளலுக்கு ஆதரவளிக்கும் அர்த்தமுள்ள வெளியீடாகும்.

*(04 புள்ளிகள்)*

**(b)** ஒரு தகவல் முறைமை (IS) என்பது ஒரு நிறுவனத்திற்குள் தீர்மானம் மேற்கொள்ளல், ஒருங்கிணைப்பு, பகுப்பாய்வு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் வகையில் தகவல்களைச் சேகரிக்க, செயன்முறைப்படுத்த, சேமிக்க மற்றும் பரப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்படும் மக்கள், தொழிநுட்பம், செயன்முறைகள் மற்றும் தரவுகளின் கட்டமைக்கப்பட்ட சேர்க்கை ஆகும். அடிப்படையில், ஒரு தகவல் முறைமையானது, மூலத் தரவை அர்த்தமுள்ள தகவலாக மாற்றி, முகாமையாளர்கள், ஊழியர்கள் அல்லது பிற அக்கறைதாரர்களால் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளப் பயன்படுத்தலாம்.

*(03 புள்ளிகள்)*

**(c)**

1 நாட்காட்டி
2 நினைவூட்டல் மற்றும் பணி தகவல்
3 செலவு மற்றும் நிதித் தகவல்
4 ஒப்பந்த விபரங்கள்
5 அமைவிட பயணத் தகவல்
6 மருத்துவ சுகாதாரப் பதிவுகள்

*(03 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| |
|---|
| ***அத்தியாயம் 02 - தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு*** |

**(a)** **தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு** என்பது ஒரு நிறுவனத்தின் தகவல் தொழிநுட்ப சூழலுக்கான அடித்தளத்தை வழங்கும் வன்பொருள், மென்பொருள், வலையமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய வசதிகளின் சேர்க்கையைக் குறிக்கும். இது சேவையகங்கள், கணினிகள், சேமிப்பக சாதனங்கள் மற்றும் வலையமைப்பு உபகரணங்கள் போன்ற பௌதீகக் கூறுகளையும், வணிக செயற்பாடுகளை ஆதரிக்கும் மென்பொருள் தளங்கள், இயக்க முறைமைகள் மற்றும் மேகத்தள சேவைகளையும் உள்ளடக்கியதாகும். தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு தரவு மற்றும் தகவல்களை சேகரித்தல், சேமித்தல், செயலாக்குதல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றை செயற்படுத்துகிறது.

*(02 புள்ளிகள்)*

**(b)** மேகத்தளக் கணினியிலானது, அளவிடக்கூடிய, நெகிழ்வான மற்றும் அணுகக்கூடிய தகவல் தொழிநுட்ப வளங்களை வழங்குவதன் மூலம் ஒரு நிறுவனத்தின் பயனுறுதியை கணிசமாக மேம்படுத்த முடியும்.

1. **வளங்களுக்கான தேவையின் பெயரிலான அணுகல்:** மேகத்தள கணினியியல் ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்கள் இணையத்தைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும் எங்கிருந்தும் பயன்பாடுகள், சேமிப்பகம் மற்றும் தரவை அணுக அனுமதிக்கிறது. இது தொழிற்பாடுகளில் தாமதங்களைக் குறைப்பதுடன், ஊழியர்கள் உள்நாட்டு உட்கட்டமைப்பில் தங்கியிராது, தொலைதூர அணுகல் மூலமோ அல்லது ஒத்துழைப்புடனோ வேலை செய்ய உதவுவதன் மூலம் ஒட்டுமொத்த தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துகிறது.

2. **செலவு மற்றும் வள உகப்பாக்கம்**: மேகத்தள சேவைகள் பௌதீக சேவையகங்கள், சேமிப்பகம் மற்றும் மென்பொருள் உரிமங்களிலான அதிக முதலீட்டின் தேவையை நீக்குகின்றன. நிறுவனங்கள் தேவைக்கேற்ப வளங்களை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடிவதுடன், அவர்கள் பயன்படுத்துவதற்கு மட்டுமே பணம் செலுத்தலாம். இது தகவல் தொழிநுட்ப வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்து, விரயங்கள் மற்றும் தொழிற்பாட்டு செலவுகளையும் குறைக்கிறது.

3. **தன்னியக்க புதுப்பிப்புகள் மற்றும் பராமரிப்பு**: மேகத்தள வழங்குநர்கள் மென்பொருள் புதுப்பிப்புகள், பாதுகாப்பு இணைப்புகள் மற்றும் கணினி பராமரிப்பை தானாகவே முகாமை செய்கிறார்கள். இது தொழிற்படா நேரத்தைக் குறைத்து, தகவல் தொழிநுட்ப ஊழியர்களை வழக்கமான பராமரிப்பு பணிகளிலிருந்து விடுவிப்பதுடன், ஊழியர்கள் எப்போதும் சமீபத்திய, மிகவும் வினைத்திறனான முறைமைகளுடன் பணிபுரிவதை உறுதி செய்கிறது. இதன் விளைவாக, வணிக செயன்முறைகள் சீராக இயங்குவதுடன், உற்பத்தித்திறன் மேம்படுகிறது.

4. **பாதுகாப்பு**: மேகத்தள வழங்குநர்கள், மேகத்தள முறைமையில் சேமிக்கப்பட்ட வாடிக்கையாளரின் தரவைப் பாதுகாப்பதற்காக உத்தரவாதமான பாதுகாப்பு நியமங்களையும் சிறந்த நடைமுறைகளையும் பராமரிக்கின்றனர்.

5. **சுற்றுச்சூழல் நிலைபேறானதன்மை**: பாரிய தரவு மையங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனங்கள் தங்கள் கார்பன் தடத்தைக் குறைக்க மேகத்தள கணினியியல் உதவுகிறது.

6. **அனர்த்த மீட்பு**: சிறிய, நடுத்தர மற்றும் பாரிய நிறுவனங்கள் தங்கள் தரவு மற்றும் பிரயோகங்களை விரைவாகவும் நம்பகமானதாகவும் காப்புப் பிரதி எடுத்து மீட்டெடுக்க மேகத்தள கணினியியல் மிகவும் வினைத்திறனான வழிகளை வழங்குகிறது. ***(06 புள்ளிகள்)***

**(c)** ஒரு நிறுவனத்தில் ஒரு வணிகத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு மென்பொருள் பல காரணங்களுக்காக முக்கியமானதாக உள்ளது:

1. வணிக செயன்முறைகளின் தன்னியக்கமாக்கல்.
2. தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பகுப்பாய்விற்குத் துணைபுரிதல்.
3. தொடர்பாடலை மேம்படுத்துதல்.
4. வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துதல்.
5. தரவு முகாமையை எளிதாக்குதல்.
6. செயற்திறனை மேம்படுத்துதல்.
7. செலவுக் குறைப்பு
8. அளவீட்டு நன்மை
9. செயற்திறன் கண்காணிப்பு
10. போட்டி நன்மை

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 04 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 3- நிறுவனங்களில் தகவல் முறைமைகள்***

**(a)**

**(i)**

1. **சந்தைப்படுத்தல் தகவல் முறைமை (MkIS)**: சந்தைப்படுத்தல் ஊழியர்கள் MkIS முறைமையைப் பயன்படுத்தி கடந்த கால மற்றும் தற்போதைய பிரச்சாரங்களின் பயனுறுதியை அறிக்கையிடுவதுடன், எதிர்கால சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களைத் திட்டமிட அவற்றின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

2. **வணிக நுண்ணறிவு அமைப்பு (BIS):** சேகரிக்கப்பட்ட தரவு மற்றும் தகவல்களின் சேகரிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் பகுப்பாய்வின் அடிப்படையில் வணிகத் தீர்மானங்களை மேற்கொள்ள BIS பயன்படுத்தப்படுகிறது. இந்த முறைமை EIS முறைமையினை ஒத்ததாகும், ஆனால் கீழ்நிலை முகாமையாளர்கள் மற்றும் நிறைவேற்றுனர்கள் இருவரும் இதைப் பயன்படுத்துகின்றனர்.

3. **வாடிக்கையாளர் உறவு முகாமை அமைப்பு (CRM)**: ஒரு CRM முறைமை முன்னைய விற்பனை, தொடர்புத் தகவல் மற்றும் விற்பனை வாய்ப்புகள் உட்பட வாடிக்கையாளர்களைப் பற்றிய முக்கியமான தகவல்களைச் சேமிக்கிறது. சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் சேவை, விற்பனை மற்றும் வணிக விருத்தி ஊழியர்கள; CRM ஐ பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

4. **விற்பனைப் படைத் தன்னியக்க முறைமை (SFA)**: விற்பனை செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல பணிகளை தன்னியக்கமாக்கும் CRM முறைமையின் ஒரு விசேட கூறு இதுவாகும். இதில் தொடர்பு முகாமை, கண்காணிப்பு மற்றும் ஒழுங்கு முகாமை ஆகியவை உள்ளடங்கும்.

5. **அறிவு முகாமை அமைப்பு (KMS)**: அறிவு முகாமை அமைப்பு என்பது தகவல்களை உருவாக்குதல், கைப்பற்றுதல், சேமித்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றுக்கு ஆதரவளிப்பதற்காக நிறுவனங்களில் அறிவை முகாமை செய்வதற்கான ஒரு முறைமையைக் குறிக்கும். KMS இன் நோக்கம், ஊழியர்கள் நிறுவனத்தின் தகவல் மற்றும் தீர்வுகளின் மூலங்களை அணுக உதவுவதாகும்.

aat SRI LANKA

6. **நிதி கணக்கியல் அமைப்பு (FAS):** MIS இன் இந்தப் பகுதி, சென்மதிக் கணக்குகள் மற்றும் வருமதிக் கணக்குகள் போன்ற நிதி மற்றும் கணக்கியலைக் கையாளும் திணைக்களங்களுக்குப் பிரத்தியேகமானதாகும்.

7. **மனித வள முகாமை முறைமை (HRMS):** இந்த முறைமை ஊழியர்களின் செயற்திறன் தகவல் மற்றும் ஊதியத் தரவைக் கண்காணிக்கும்.

8. **வழங்கல் சங்கிலி முகாமை முறைமை (SCM)**: உற்பத்தி நிறுவனங்கள் SCM ஐப் பயன்படுத்தி வளங்கள், மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு முதல் பொருட்களை அனுப்பும் வரை அனைத்து வழிகளையும் கண்காணிக்கின்றன.

***(06 புள்ளிகள்)***

**(ii)** மேலே குறிப்பிடப்பட்ட முறைமைகளிலிருந்து பெறக்கூடிய இரண்டு வகையான அறிக்கைகளாவன:

1. காலக்கிரம / அட்டவணைப்படுத்தப்பட்ட அறிக்கைகள்
2. விலக்கு / தற்காலிக அறிக்கைகள்
3. தேவையின் பெயரிலான / நிகழ்நேர அறிக்கைகள்

***(02 புள்ளிகள்)***

**(b)** Masha Clothing வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் வணிகம் பல நன்மைகளை வழங்குகிறது:

1. **வசதி மற்றும் அணுகல்**: வாடிக்கையாளர்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் இணைய வழியில் உற்பத்திகளை, கட்டளைகளை மேற்கொள்ளலாம் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.
2. பரந்த உற்பத்தி வீச்சு மற்றும் தகவலுக்கான அணுகல்.
3. இலத்திரனியல் வணிகம் மெய்நிகர் ஏலங்களுக்கான தெரிவுகளை வழங்குகிறது.
4. இது உடனடியாகக் கிடைக்கும் தகவல்களை வழங்குகிறது.
5. இலத்திரனியல் வணிகம் நிறுவனங்களிடையே போட்டியை அதிகரிக்க, இதன் விளைவாக, நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு கணிசமான விலைக் கழிவுகளை வழங்குகின்றன.

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 05 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 4 - தகவல் முறைமைகளுக்கான நெறிமுறை, சமூக மற்றும் சட்ட சூழல்.***

**(a)** Cakes & Bakes பல்வேறு **சமூக வலையமைப்புத் தளங்களைப்** பயன்படுத்தி விளம்பரங்களை இயக்கவும் வாடிக்கையாளர்களுடன் ஈடுபடவும் முடியும். நான்கு உதாரணங்கள் பின்வருமாறு:

1. **Facebook**
2. **Instagram**
3. **LinkedIn**
4. **Twitter or X**

***(03 புள்ளிகள்)***

**(b)**

- நிகழ்நேரத்தில் தொழிற்துறை போக்குகளைக் கண்டறியும் இயலுமை.
- மேலும் முற்றடக்கமான போட்டிப் பகுப்பாய்வு.
- சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை வழங்குதல்.
- வாடிக்கையாளர்களின் உள்ளடக்கம் மற்றும் கதைகளை ஒரு நொடியில் தொகுத்தல்.
- வாடிக்கையாளர்களின் புகைப்படங்களும் வெற்றிக் கதைகளும் அதிக ஈடுபாடு மற்றும் மாற்று விகிதங்களுடன் கைகோர்த்துச் செல்லுதல்.
- போட்டியாளர்களை விட அதிகாரத்தை நிலைநிறுத்துதல்.
- இளைய, சமூக ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களை ஈர்த்தல்.
- இது ஆட்சேர்ப்புகளுக்கு உதவும்.

*(03 புள்ளிகள்)*

2. **இணையவெளி நையாண்டி** என்பது குழு அல்லது தனிநபர்களால் எண்ணியல் சாதனங்கள், சமூக ஊடகங்கள் அல்லது இணையவழித் தளங்களைப் பயன்படுத்தி தனிநபர்களை வேண்டுமென்றே துன்புறுத்துதல், மிரட்டுதல் அல்லது தீங்கு விளைவிப்பதைக் குறிக்கும். இது பெரும்பாலும் அச்சுறுத்தும் செய்திகளை அனுப்புதல், தவறான தகவல்களைப் பரப்புதல் அல்லது ஒருவரை இணையவழியில் பகிரங்கமாக அவமானப்படுத்துதல், அவர்களின் உணர்ச்சி அல்லது உளவியல் நல்வாழ்வை குறிவைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

   இதற்கு நேர்மாறாக, தரவு களவாடல் என்பது தகவல்களைத் திருடுதல், மாற்றுதல் அல்லது சேதப்படுத்தும் நோக்கத்துடன் கணினி முறைமைகள், வலையமைப்புக்கள் அல்லது தரவை அங்கீகரிக்கப்படாத முறையில் அணுகுவதைக் குறிக்கும். தரவு களவாடல் என்பது பிரதானமாக, தனிப்பட்ட துன்புறுத்தலை விட கணினி பாதுகாப்பை குறிவைக்கும் ஒரு தொழிநுட்ப மீறலாகும்.

aat SRI LANKA

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 05 - தகவல் முறைமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் தொழிநுட்பப் போக்குகள்***

**(a)**

1. **தொழிநுட்ப முன்னேற்றங்கள்**: செயற்கை நுண்ணறிவு, விடயங்களின் இணையம் மற்றும் கைத்தொலைபேசி எண்ணியல் தளங்கள் போன்ற தொழிநுட்பங்களின் விரைவான வளர்ச்சி நிறுவனங்கள் செயற்பாடுகளை மேம்படுத்தவும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தவும் உதவியுள்ளது. மருந்தாக்கச் சங்கிலியைப் பொறுத்தவரை, செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் கேள்வி முற்துணிவு ஒவ்வொரு கிளையிலும் எந்த மருந்துகள் தேவைப்படும் என்பதைக் கணிக்க உதவும் அதே நேரத்தில் விடயங்களின் இணைய உணர்கருவிகள் நிகழ்நேரத்தில் இருப்புக்களைக் கண்காணித்து, இருப்பின்மை மற்றும் விரயங்களைக் குறைக்கும். இந்த தொழிநுட்பங்கள் செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாகவும் துல்லியமாகவும் மாற்றுவதுடன், நவீன வணிக நடைமுறைகளுடன் ஒத்துப்போகின்றன.
2. **வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை மாற்றுதல்**: வாடிக்கையாளர்கள் இப்போது பணமில்லா மற்றும் தொடர்பில்லா பரிவர்த்தனைகள் உட்பட வேகமான, வசதியான மற்றும் தடையற்ற சேவை அனுபவங்களை எதிர்பார்க்கிறார்கள். எண்ணியல் பணப்பைகள் மற்றும் QR

குறியீடுகள் போன்ற கைத்தொலைபேசிக் கொடுப்பனவுத் தீர்வுகளைப் பின்பற்றல், இந்த எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்து, வசதி மற்றும் திருப்தியை மேம்படுத்துகிறது. நிறுவனத்தின் தீர்மானம் எண்ணியல் ஈடுபாடு மற்றும் சேவைகளுக்கான உடனடி அணுகல் ஆகியவை போட்டித்தன்மையை பராமரிப்பதற்கு முக்கியமானதாகவுள்ள 4வது கைத்தொழிற் புரட்சியின் வாடிக்கையாளர் சார்ந்த சக்திகளின் செல்வாக்கை பிரதிபலிக்கிறது.

3. **தரவு சார்ந்த தீர்மானம் மேற்கொள்ளல்**: ஏராளமான தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு கருவிகள் நிறுவனங்களை சிறந்த, வேகமான மற்றும் துல்லியமான வணிகத் தீர்மானங்களை மேற்கொள்ளத் தூண்டுவதுடன், செயற்கை நுண்ணறிவு மற்றும் விடயங்களின் இணையம் போன்றவற்றைப் பின்பற்றுவதில் செல்வாக்கு செலுத்துகின்றன.

***(03 புள்ளிகள்)***

**(b)**

- Pick Me / Uber (பயண-அனுசரணை செயலிகள்): நிகழ்நேர முன்பதிவுகள், GPS கண்காணிப்பு மற்றும் எண்ணியல் கட்டணங்களை செயற்படுத்தும் செயலி அடிப்படையிலான தளங்களுடன் பாரம்பரிய வாடகை வாகன சேவைகளை பதிலீடு செய்தது. கிக் அடிப்படையிலான வேலைவாய்ப்பை அறிமுகப்படுத்தும் போது அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்திறன்.
- ez Cash / mCash / FriMi (கைத்தொலைபேசி கட்டண மற்றும் FinTech செயலிகள்): பாரம்பரிய பணப் பரிவர்த்தனைகளை எண்ணியல் மற்றும் கைத்தொலைபேசி அடிப்படையிலான கொடுப்பனவுகளாக மாற்றி, வசதியை மேம்படுத்தியது மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தது.
- Daraz.lk / Kapruka (இலத்திரனியல் வணிக தளங்கள்): இணையவழிக் கொள்வனவு, வீட்டுவாசலுக்கான விநியோகம் மற்றும் பரந்த உற்பத்தி அணுகலை இயக்குவதன் மூலம் பாரம்பரிய சில்லறை விற்பனையை சீர்குலைத்தது.
- E-Channeling / Doc 990 (தொலைமருத்துவத் தளங்கள்): மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பதிவுகளுக்கான தொலைதூர ஆலோசனைகள் மற்றும் எண்ணியல் அணுகலை வழங்குவதன் மூலம் பாரம்பரிய சுகாதாரப் பராமரிப்பை மாற்றியது.
- Airbnb / Booking.com (சுற்றுலாத் தளங்கள்): வழக்கமான பயண முகவர்களை மாற்றியமைத்து, உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு சிறிய தங்குமிட வழங்குநர்களுக்கான அணுகலை விரிவுபடுத்தியது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் திறன் மானிமுறை: மையப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மின்சாரம் மற்றும் கையேடு மீட்டர் வாசிப்பை நம்பியிருப்பது குறைக்கப்பட்டது. வணிகங்கள் மற்றும் வீடுகள் கண்காணிக்க முடிவதுடன், நுகர்வு, ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்துதல், செலவுகளைக் குறைக்கவும் முடியும். (உ-ம்: சூரியகல நுண் கட்டமைப்பு, இலங்கை மின்சார சபையின் திறன் மானிகள்).

***(04 புள்ளிகள்)***

**(c)**

1. அதிக நடைமுறைப்படுத்தல் செலவுகள்.
2. ஊழியர் பயிற்சி மற்றும் எதிர்ப்பு
3. தரவுப் பாதுகாப்பு மற்றும் தனியுரிமை இடர்கள்
4. வணிக மாதிரிகளை மாற்றுதல்
5. தரவுப் பாதுகாப்பு / தகவல் திருட்டு சிக்கல்கள்

6. சாத்தியமான வேலை இழப்புகள்
7. திறன் சவால்கள; / திறன் பொருத்தமின்மை
8. உட்கட்டமைப்பு சவால்கள்
9. புலமைச் சொத்துரிமைக்கான சட்டத் தேவைகள்

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

SRI LANKA

*பிரிவு B முடிவு*

| ஒரு (01) கட்டாய வினா<br>(மொத்தம் 25 புள்ளிகள்) | பகுதி – C |
|---|---|

## *வினா 07 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 02: தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு***
***அத்தியாயம் 03: நிறுவனங்களில் தகவல் முறைமைகள்***
***அத்தியாயம் 04: தகவல் முறைமைகளுக்கான நெறிமுறை சமூக மற்றும் சட்ட சூழல்.***

**(a)**

1. **மையப்படுத்தப்பட்ட தரவு முகாமை தரவு நிலைத்தன்மையை அதிகரிக்கிறது**: ஒரு தரவுத்தள முகாமை முறைமை கொள்வனவு, உற்பத்தி, இருப்பு, நிதி மற்றும் மனித வளங்களை உள்ளடக்கிய நிறுவனத்தின் அனைத்துத் தரவையும் ஒரே, மையப்படுத்தப்பட்ட முறைமையில் சேமிக்க அனுமதிக்கிறது. இது தரவு நகலெடுப்பை நீக்கி, தரவு நிலைத்தன்மையை உறுதி செய்வதுடன், ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்கள் நிகழ்நேரத்தில் துல்லியமான தகவல்களை அணுக உதவி, திணைக்களங்கள் முழுவதும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும்.
2. **தரவு மீட்டெடுப்பு மற்றும் பகுப்பாய்வு மூலம் மேம்படுத்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல்**: ஒரு தரவுத்தள முகாமை முறைமை மூலம், முகாமையாளர்கள் அறிக்கைகளை உருவாக்கலாம், வினவல்களை இயக்கலாம் மற்றும் உற்பத்தி போக்குகள், இருப்பு மட்டங்கள் மற்றும் நிதி செயற்திறனை ஆராய பகுப்பாய்வு கருவிகளைப் பயன்படுத்தலாம். நிகழ்நேர, ஒழுங்கமைக்கப்பட்ட தகவல்களை அணுகும் இந்த திறன் தரவு சார்ந்த தீர்மானம் மேற்கொள்ளலை செய்படுத்துகிறது, இது நிறுவனம் தொழிற்பாட்டு சிக்கல்கள் அல்லது சந்தை கோரிக்கைகளுக்கு விரைவாக பதிலிறுக்க அனுமதிக்கும்.
3. **மேம்படுத்தப்பட்ட தரவு பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு**: ஒரு தரவுத்தள முகாமை முறைமை அணுகல் கட்டுப்பாடுகள், பயனர் அங்கீகாரம் மற்றும் தரவு சரிபார்ப்பு போன்ற அம்சங்களை வழங்குவதன் மூலம், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் மட்டுமே முக்கியமான தகவல்களை மாற்றியமைக்க முடியும் என்பதை உறுதி செய்கிறது. LankaTech-ஐப் பொறுத்தவரை, இது மதிப்புமிக்க வணிகத் தரவைப் பாதுகாப்பாகப் பேணுவதுடன், பிழைகளைக் குறைத்து பதிவுகளின் துல்லியத்தைப் பேணுவதன் மூலம்இது வினைத்திறனான மற்றும் நம்பகமான செயற்பாடுகளைப் பராமரிப்பதற்கு முக்கியமானதாகும்.
4. **மேம்படுத்தப்பட்ட தரவு பகிர்வு மற்றும் ஒத்துழைப்பு**: பல்வேறு திணைக்களங்களில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பயனர்கள் தரவுத்தள முகாமை முறைமை (DBMS) மூலம் ஒரே நேரத்தில் தரவைப் பகிர மற்றும் அணுக முடியும். இது உற்பத்தி, விற்பனை மற்றும் முகாமைத் திணைக்களங்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கிறது.
5. **தரவு சுதந்திரம்**: ஏற்கனவே உள்ள பிரயோகங்களைப் பாதிக்காமல் தரவுக் கட்டமைப்புகள் அல்லது வடிவங்களில் மாற்றங்களைச் செய்யலாம். வணிகத் தேவைகள் உருவாகும்போது இந்த நெகிழ்வுத்தன்மை LankaTech-ஐ எளிதாக அனுமதிக்கிறது.
6. **குறைக்கப்பட்ட பிரயோக விருத்தி மற்றும் பராமரிப்பு நேரம்:** தரவு அணுகல், அறிக்கையிடல் மற்றும் பரிவர்த்தனை கையாளுதல் போன்ற பொதுவான DBMS செயற்பாடுகள்-நிகழ்ச்சியாக்க சிக்கலைக் குறைத்து, கணினி மேம்பாட்டை விரைவுபடுத்துகின்றன, இது லங்காடெக் புதிய வணிக பயன்பாடுகளை விரைவாக அறிமுகப்படுத்த உதவும்.

***(06 புள்ளிகள்)***

**(b)**

1. மேம்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு வினைத்திறன்
2. நிகழ்நேரத் தரவு அணுகல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல்
3. வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குனர்களுடனான மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு
4. நிலைபேறானதன்மை முயற்சிகளுக்கான ஆதரவு
5. போட்டி நன்மை
6. துல்லியமான முற்துணிவு
7. திணைக்களம்சார் ஒத்துழைப்பு
8. ஒருங்கிணைந்த தகவல்
9. செலவு சேமிப்பு
10. நெறிப்படுத்தப்பட்ட செயன்முறைகள்
11. இயக்கம்
12. தனிப்பயனாக்கப்பட்ட அறிக்கையிடல்

***(04 புள்ளிகள்)***

**(c)** தரவு அகழ்வு என்பது தரவுக் களஞ்சியங்கள் எனப்படும் பாரிய தரவுத் தொகுப்புகளிலிருந்து தகவல்களைப் பிரித்தெடுத்தல் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தரவு அகழ்தல் என்பது தரவுத் தொகுப்புகளில் காணப்படத்தக்க போக்குகளை மற்றும் மறைக்கப்பட்ட உறவுமுறைகளை அடையாளம் காண அறிவை அகழும் ஒரு நுட்பமாகும்.

1. உற்பத்தி கட்டுப்பாடு.
2. நிதிப் பகுப்பாய்வு.
3. சந்தைப் பகுப்பாய்வு மற்றும் முகாமை.
4. சுகாதாரப் பராமரிப்பு.
5. இடர் முகாமை.
6. உயிரியல் தரவு.
7. வாடிக்கையாளர் தக்கவைப்பு.
8. உற்பத்தி.
9. மோசடி கண்டறிதல்.
10. திரும்பல்கள்.

***(05 புள்ளிகள்)***

**(d)**

1. தரவு கட்புலனாக்கல் கருவிகள்
2. வணிக நுண்ணறிவு அறிக்கையிடல் கருவிகள்
3. சுய சேவை பகுப்பாய்வு தளங்கள்
4. புள்ளிவிபர பகுப்பாய்வு கருவிகள்
5. பெருந்தரவுத் தளங்கள்

***(03 புள்ளிகள்)***

SRI LANKA

**(e)**

1. **செலவுக் குறைப்பு மற்றும் சக்தி சேமிப்பு**: சக்தி-வினைத்திறன் வாய்ந்த சேவையகங்கள், கணினிகள் மற்றும் திறன் உணரிகள் குறைந்த மின்சாரத்தை பயன்படுத்துவதனால் பயன்பாட்டு செலவுகள் குறைகின்றன. மேலும், காகிதத்திற்குப் பதிலாக எண்ணியல் ஆவணங்களைப் பயன்படுத்துவது அச்சிடுதல் மற்றும் சேமிப்பு செலவுகளைக் குறைக்கிறது, இது தொழிற்பாட்டு செலவில் ஒட்டுமொத்த சேமிப்பிற்கு வழிவகுக்கிறது.
2. **மேம்படுத்தப்பட்ட நிறுவன நற்பெயர் மற்றும் நிலைபேறானதன்மை**: சுற்றுச்சூழலுக்கு உகந்த தகவல் தொழிநுட்ப நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், லங்காடெக் நிலைபேறானதன்மை மற்றும் நிறுவன சமூகப் பொறுப்புக்கான அதன் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது. இது வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் அக்கறைதாரர்களிடையே நிறுவனத்தின் பிம்பத்தை மேம்படுத்தலாம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பங்களிக்கும் அதே வேளையில் சுற்றுச்சூழல் உணர்வுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளர்களை ஈர்க்கும்.
3. **முதலீட்டாளர்கள் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை**: முதலீட்டாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுவணிக சுற்றுச்சூழல் பொறுப்பு குறித்து அதிக அக்கறை கொண்டுள்ளனர். தங்கள் கார்பன் தடம் மற்றும் நிலைபேறானதன்மை செயற்திறனை தீவிரமாக அளவிடும் மற்றும் வெளிப்படுத்தும் நிறுவனங்கள் நம்பிக்கையைப் பெறுவதுடன், அதிக சந்தை மதிப்பைப் பேணுகின்றன.
4. **மேம்படுத்தப்பட்ட வள வினைத்திறன்**: மெய்நிகராக்கம் மற்றும் சேவையக ஒருங்கிணைப்பு போன்ற நடைமுறைகள் வன்பொருள் பயன்பாட்டை அதிகரித்து, தேவையான பௌதீக சேவையகங்கள் மற்றும் குளிரூட்டும் அமைப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்கின்றன. இது குறைந்த மின் நுகர்வு, சிறிய தரவு மைய தடம் மற்றும் குறைக்கப்பட்ட உபகரண செலவுகளுக்கு வழிவகுக்கும்.
5. **ஊழியர்கள் மற்றும் அக்கறைதாரர்களின் ஈடுபாடு**: பசுமைத் தகவல் தொழிநுட்பம் நிறுவனத்திற்குள் நிலைத்தன்மையின் கலாச்சாரத்தை வளர்க்கிறது. ஊழியர்கள் பெரும்பாலும் சுற்றுச்சூழல் நட்பு பணியிடத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் பெருமை கொள்கிறார்கள், மன உறுதியை மேம்படுத்துகிறார்கள் மற்றும் நிறுவன நிலைத்தன்மை இலக்குகளுக்கு அர்ப்பணிப்பை ஏற்படுத்துகிறார்கள்.

***(04 புள்ளிகள்)***

**(f)**

1. பாரம்பரிய வணிகங்களைப் போலவே பராமரிக்க வளாகத்தில் பௌதீக உபகரணங்கள் காணப்படுவதில்லை.
2. சேமிப்பகத்தை மேம்படுத்த எளிதானது.
3. Amazon Elastic Block Store (Amazon EBS), Amazon Simple Storage Service (Amazon S3), மற்றும் Amazon Elastic File System (Amazon EFS) போன்ற பல்வேறு மேகத்தள சேவை வழங்குநர்களிடையே தெரிவு செய்யலாம்.
4. அனர்த்த மீட்பு வசதிகளை வழங்குகிறது. (வெவ்வேறு கிடைக்கும் மண்டலங்களைப் பயன்படுத்தி).
5. மேகத்தள சேவை வழங்குநர்கள் உதவ முகாமை கருவிகளை வழங்குகிறார்கள்.
6. ஊழியர்கள் எங்கிருந்தும் முறைமைகளை அணுக முடியும்.
7. பராமரிப்பு மற்றும் ஆரம்ப உருவமைப்பிற்காக மேலதிக தொழிநுட்ப ஊழியர்கள் அல்லது ஒப்பந்ததாரர்களை பணியமர்த்த வேண்டிய அவசியமில்லை.
8. தொழிநுட்பமல்லாத ஒரு நிறுவனத்திற்கு, மேகத்தள வழங்குநர் அவர்கள் தமது நிறுவனத்தினுள்ளேயே வழங்கக்கூடியதை விட சிறந்த பாதுகாப்பு மற்றும் உபகரண

நம்பகத்தன்மையைக் கொண்டிருக்கலாம்.

9. காலாவதியான உபகரணங்கள் அல்லது இயக்க முறைமை மேம்பாடுகள் பற்றி கவலைப்படத் தேவையில்லை.

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 25 புள்ளிகள்)*

SRI LANKA

*பிரிவு C முடிவு*

***Notice:***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*